www.Padasalai.Net www.CBSEtips.in

தூத்துக்குடி மாவட்டம்

# முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2023

## பத்தாம் வகுப்பு

பதிவு எண்: 

நேரம்: 1.30 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்: 50

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 7×1=7

1. "மெத்த வணிகலன்" என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும்காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும்,அணிகலன்களும்

2. "பாடு இமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர்குளிர்ச்சி அடைதல்
இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

3. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" - பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?
அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

4. விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை ............
அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

5. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ..........
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

6. முத்துக்குளிக்கும் கொற்கையின் அரசராகவும், தமிழ்ப் புலவராகவும் திகழ்ந்த அதிவீரராம பாண்டியருக்கு ............ பட்டபெயரும் உண்டு.
அ) இளமாறன் ஆ) சீவலமாறன்
இ) பாட்டுக்கொருபுலவன் ஈ) சிந்துக்குத் தந்தை

7. திருமூலர் தான் எழுதிய .............. நூலில் மூச்சுப் பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியுள்ளார்.
அ) சிலப்பதிகாரம் ஆ) திருமந்திரம் இ) காசிக்காண்டம் ஈ) முல்லைப்பாட்டு

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு குறுகிய விடையளி:**
**(14வது வினா கட்டாய வினா)** 5×2=10

8. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
9. 'வேங்கை' என்பதை தொடர் மொழியாகவும், பொது மொழியகவும் வேறுபடுத்திக் காட்டுக.
10. 'நமக்கு உயிர் காற்று ; காற்றுக்கு வரம் மரம் - மரங்களை வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம் - இது போன்று உலகக்காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



11. பெற்றோர் வேலையிலிருந்து திரும்ப தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.
12. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமகன் சொற்களை எழுதுக.
13. 'இறடி பொம்மல் பெறுகுவீர்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
14. 'விடும்' – என முடியும் குறட்பாவினை எழுதுக.

**III. மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்க: 3×3=9**

15. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
16. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
    கெடுப்பார் இலானும் கெடும் - அலகிடுதல் தருக.
17. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
    கோலொடு நின்றான் இரவு - குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.
18. "சிறுதாம்பு" எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**IV. எவையேனும் மூன்றிற்கு விடையளி: 3×2=6**

19. *கீழ்க்காணும் சொற்களின் கூட்டப் பெயர்களைக் கண்டுபிடிக்க:*
    அ) குவியல் ஆ) மந்தை
20. *கலைச்சொல் அறிக :*
    அ) Tornado ஆ) Homograph
21. *இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக:*
    அ) சிலை - சீலை ஆ) வளி - வாளி
22. *தொகை சொற்களை தொடரில் அமைக்க:*
    அ) எழுகதிர் ஆ) மலைவாழ்வார்

**V. பின்வரும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க: 2×5=10**

23. மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.
24. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக :



**VI. ஒரு பக்க அளவில் ஏதேனும் ஒன்றிற்கு விடையளி: 1×8=8**

25. ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

(அல்லது)

26. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

---

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com